**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons),**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 17–ம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவர் ஆண்டு, 2056, ஶ்ரீ குரோதி வருடம், பங்குனி மாதம் 3–ம் நாள்**
**அசல் வழக்கு எண் –47/2023**
**CNR No.TNSV15-005518-2023**

மைனர் வீரமாகாளி
(மைனர் வாதிக்கு தாயாரும், இயற்கை
பாதுகாவலருமான கனிமொழி கார்டியன்
ஸ்தானத்தில்) ...வாதி

/எதிர்/

1.தமிழக அரசுக்காக அதன்
சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்கள்
2.வட்டாட்சியர் அவர்கள், திருப்புவனம்.
3.ராஜாமணி
4.கல்பனாதேவி
5.சரண்யா
6.மைனர் தனுஶ்ரீ
7.மைனர் சமுத்ராதேவி
(மைனர் 6, 7 பிரதிவாதிகளுக்கு தாயாரும்,
இயற்கை பாதுகாவலருமான 5ம் பிரதிவாதி
சரண்யா கார்டியன் ஸ்தானத்தில்) ---- பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 12.03.2026–ம் அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்த போது, வாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் அரசு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஜெயராமன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், லாடனேந்தல் குரூப், லாடனேந்தல் கிராமம், வீரலெட்சுமிபுரத்தில் கதவு எண்.2/221 மதுரை இராமேஸ்வரம் நெடுஞ்சாலை

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.17 16:05:06 +0530

என்ற முகவரியில் நிரந்தர வசிப்பாக வசித்து வந்து, மதுரை–625 009, அனுப்பானடி, மதுரை–தூத்துக்குடி ரிங் ரோடு, வேலம்மாள் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் வைத்து கடந்த 28.07.2019ம் தேதி இறந்துபோன வெற்றிப்பாண்டியன் என்பவருக்கு வாதியான மைனர் வீரமாகாளி உள்ளிட்ட 3 முதல் 7 பிரதிவாதிகள் சட்டப்பூர்வமான வாரிசு என விளம்புகை செய்தும், இவ்வழக்கின் செலவுதொகைகளை வாதிக்கு பிரதிவாதிகளை கொடுக்கும்படியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) மனுவின் சுருக்கம்:</u>**

தாவா என்பது கடந்த 28.07.2019ம் தேதியன்று சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், லாடனேந்தல் கிராமத்தில் வீரலெட்சுமிபுரம் கதவு எண்:2/221 மதுரை–இராமேஸ்வரம் நெடுஞ்சாலை என்ற முகவரியில் நிரந்தர வசிப்பாக வசித்து வந்து, மதுரை 625 009, அனுப்பானடி மதுரை தூத்துக்குடி ரிங்ரோட்டில் வேலாம்மாள் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையில் வைத்து இறந்துபோன ராஜாமணி மகன் வெற்றி பாண்டியன் என்பவருக்கு இந்த வாதி உள்ளிட்ட 3 முதல் 7 வரை பிரதிவாதிகள் சட்டப்படியான வாரிசுகள் என விளம்புகை செய்யக்கோரி தாவா வழக்கு தாக்கல் செய்யப்படுகிறதாகவும், மேற்படி விலாசத்தில் வசித்து வரும் வேலாம்மாள் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையில் வைத்து இறந்துபோன ராஜாமணி மகன் வெற்றி பாண்டியன் கடந்த 28.07.2019ம் தேதி இறந்துள்ளதாகவும், மேற்படி வெற்றிப்பாண்டியனின் தகப்பனார் 3ம் பிரதிவாதி ராஜாமணி என்றும், தாயார் 4ம் பிரதிவாதி என்றும், மேற்படி வெற்றிபாண்டியனுக்கு சரண்யா என்பவர் முதல் மனைவி என்றும், வெற்றிபாண்டியனுக்கும் சரண்யாவுக்கும் மைனர் தனுஸ்ரீ, மைனர் சமுத்ராதேவி ஆகிய இருவரும் பிறந்துள்ளதாகவும், வெற்றிபாண்டியன் கனிமொழி என்பவரை 2வது மனைவியாக திருமணம் செய்துள்ளதாகவும், வெற்றிபாண்டியனுக்கும் 2வது மனைவியான கனிமொழி என்பவருக்கும் வாதி மைனர் வீரமாகாளி மட்டுமே பிறந்துள்ளதாகவும், மேற்படி சரண்யா தான் இவ்வழக்கில் 5ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும், மைனர் தனுஸ்ரீ, மைனர் சமுத்ராதேவி இவ்வழக்கில் 6, 7 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும், 2வது மனைவி

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.17 16:05:12 +0530

கனிமொழி சட்டப்படியான வாரிசாக வர இயலாது என்பதால், தாவா வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றும், மைனர் வீரமாகாளி அவரது தாயாரும், இயற்கை பாதுகாவலருமான கனிமொழியின் பராமரிப்பிலும், வளர்ப்பிலும் இருந்து வருவதால், மைனர் வீரமாகாளிக்கு கார்டியனாக கனிமொழி தாவா வழக்கினை தாக்கல் செய்ய அனுமதி கோரி சிபிசி ஆர்டர் 32 ரூல் 1, 5 ஆகிய பிரிவின் படி கார்டியன் நியமன மனு தாக்கல் செய்து, தாவா வழக்கும் தாக்கல் செய்யப்படுகிறதாகவும், 6, 7 பிரதிவாதிகள் மைனர்களாக இருப்பதால் மேற்படி மைனர்களுக்கு தாயாரும் இயற்கை பாதுகாவலருமான 5ம் பிரதிவாதி சரண்யா என்பவரை கார்டியனாக நியமனம் செய்து கொள்ள சிபிசி ஆர்டர் 32 ரூல் 1, 5 ன் படி பிரிதொரு மனு தாக்கல் செய்யப்படுகிறதாகவும், பிராது வம்சாவழி பட்டியல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் வீரமுருகன், தனலெட்சுமி ஆகிய இருவரும் 3, 4 பிரதிவாதிகளுக்கு வாரிசுகளாக இருப்பதாலும் இறந்துபோன வெற்றிபாண்டியனுக்கு வாரிசுகளாக வராதநிலையில் தாவா வழக்கில் வம்சாவழி பட்டியலில் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்றும், வெற்றிபாண்டியன் இறந்தபிறகு இந்த வாதியை அவரது தாயார் ஆன கனிமொழி என்பவரே தனது பராமரிப்பிலும், வளர்ப்பிலும், வைத்து வளர்த்து வருகிறதாகவும், 3, 4 பிரதிவாதிகள் இந்த வாதியை தனது மகனுக்கு பிறந்த வாரிசு என்று கூட நினைக்காமல் எவ்வித பண உதவியோ, பொருள் உதவியோ செய்யாமல் மருத்துவ செலவினங்கள் உள்ளிட்ட அனைத்து செலவுகளையும், செய்திடாமல் வாதியை 3, 4 பிரதிவாதிகள் புறக்கணித்து வருகின்றதாகவும், இதனால் இந்த 3, 4 பிரதிவாதிகளுக்கு பூர்வீக பாத்தியமாக கிடைக்கப்பெற்ற சொத்துக்களிலிருந்து, வெற்றிபாண்டியனுக்கு சேரவேண்டிய 5ல் 1 பாகத்தில் 3ல் 1 பங்கும் கோரி வாதியால் பாகப்பிரிவினைக்கான வழக்கும் தாக்கல் செய்யவேண்டியுள்ளதாகவும், இந்த மைனர் வாதிக்கு கார்டியனான கனிமொழி 3, 4 பிரதிவாதிகள் உள்ளிட்ட வெற்றிபாண்டியனின் உடன்பிறந்த சகோதரர் வீரமுருகன், சகோதரி தனலெட்சுமி ஆகிய நான்கு பேர்களுக்கும் வெற்றிபாண்டியனுக்கு

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.17 16:05:17 +0530

சேரவேண்டிய 4 ல் 1 பங்கினை பெற கடந்த 08.10.2022ம் தேதியன்று வழக்கறிஞர் மூலமாக சட்ட அறிவிப்பும் அனுப்பப்பட்டுள்ளதாகவும், மேற்படி வழக்கறிஞர் சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி வழக்கறிஞர் சட்ட அறிவிப்பை 3, 4 பிரதிவாதிகள் உள்ளிட்ட வீரமுருகன், தனலெட்சுமி ஆகியோர்கள் பெற்றுக்கொண்டு, திரும்பி வரப்பற்ற அஞ்சலக ஒப்புதல் அட்டை பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி வழக்கறிஞர் சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்ட 3, 4 பிரதிவாதிகள் உள்ளிட்ட வீரமுருகன், தனலெட்சுமி ஆகிய நான்கு பேர்களாலும், 20.10.2022ம் தேதி பதில் வழக்கறிஞர் சட்ட அறிவிப்பும் அனுப்பியுள்ளதாகவும், மேற்படி அறிவிப்பில் 5ம் பிரதிவாதியை இறந்துபோன வெற்றிபாண்டியன் முதலாவதாக திருமணம் செய்து கொண்டு அதன் மூலம் மைனர் 6, 7 பிரதிவாதிகள் வாரிசுகளாக பிறந்துள்ளனர் என தெரிவித்துள்ளதாகவும், அதன்படி தாவா வழக்கில் 5 முதல் 7 வரை பிரதிவாதிகளும், தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும், இந்த வாதியின் கார்டியன் கனிமொழி பிரதிவாதியின் அலுவலகத்தில் 3, 4 பிரதிவாதிகள் உள்ளிட்ட இந்த வாதி மைனர் வீரமாகாளி மற்றும் கார்டியன் கனிமொழி ஆகியோர்களை வாரிசுகளாக குறிப்பிட்டு, வாரிசு சான்று வழங்ககோரி இணையவழியின் வாயிலாக மனுச்செய்ததில் 2ம் பிரதிவாதியால் இறந்துபோன வெற்றிபாண்டியனுக்கு இரண்டு மனைவிகள் உள்ளதாகவும், அதனால் நீதிமன்ற உத்தரவு மூலம் வாரிசுசான்று பெற்றுகொள்ள வேண்டியது என இணையவழி மனுவானது 10.11.2022ம் தேதி நிராகரிக்கப்பட்டதாகவும், மேற்படி நிராகரிப்பு செய்ததற்கான இணையவழி Status பிராதுடன் 6வது இலக்க ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இறந்துபோன வெற்றிப்பாண்டியனுக்கு சேரவேண்டிய பூர்வீகச் சொத்துக்களின் பாகத்தில் இருந்து இந்த வாதியும் தனக்குரிய பாகத்தை பெற வேண்டியிருப்பதால் இறந்துபோன வெற்றிப்பாண்டியனுக்கு வாரிசுச்சான்றும் பெற வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், அதன்படி இந்த வாதி உள்ளிட்ட 3 முதல் 7 வரை

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.17 16:05:23 +0530

பிரதிவாதிகள் சட்டப்படியான வாரிசுகள் என விளம்புகை செய்ய வேண்டி தாவா வழக்கும் தாக்கல் செய்யப்படுகிறதாகவும், 3 முதல் 7 வரை பிரதிவாதிகளும் இந்த வாதியுடன் சேர்ந்து வழக்கிட வராததால், பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும், இதனால் பிரதிவாதிகளுக்கு எவ்வித இழப்பும் ஏற்படக்கூடியதில்லை என்றும், அவ்விதம் இல்லாவிடில் வாதிக்கு தாங்கமுடியாத கஷ்டநஷ்டம் ஏற்படக்கூடும் என்றும், 1, 2 பிரதிவாதிகள் அரசு அதிகாரியாக இருப்பதால் அவர்கள் மீது தனியாக வழக்கு தாக்கல் செய்யும் முன்பு சி.பி.சி செக்சன் 80—ன்படி முன்அறிவிப்பு அனுப்பிட வேண்டும் என்றும், ஆனால் வழக்கின் அவசர நிலை கருதி அவர்களுக்கு சி.பி.சி செக்சன் 80—ன்படி முன்அறிவிப்பு அனுப்பிட காலஅவகாசம் இல்லை என்பதால் அதனை Dispense செய்திட சி.பி.சி செக்சன் 80(2) —ன்படி தனியாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து இறந்துபோன வெற்றிப்பாண்டியனுக்கு வாதி மற்றும் 3 முதல் 7 பிரதிவாதிகளை வாரிசுகள் என விளம்புகை செய்யக்கோரி இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3)2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யும் எதிர்வழக்குரை</u>**

பிராதில் கூறியுள்ள விஷயங்களில் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயங்கள் தவிர மற்றவைகளை வாதியே நிரூபணம் செய்ய வேண்டும் என்றும், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், லாடனேந்தல் கிராமத்தில் மதுரை — ராமேஸ்வரம் நெடுஞ்சாலையில் வீரலெட்சுமிபுரம் கதவுஎண்.2/221 என்ற முகவரியில் நிரந்தரமாக வசித்து வந்த ராஜாமணி மகன் வெற்றிப்பாண்டியன் என்பவர் கடந்த 28.07.2019ம் தேதியன்று இறந்து விட்டதாகவும், மேற்படியாருக்கு முதல் மனைவி சரண்யா என்பவருக்கு தனுஸ்ரீ, சமுத்ராதேவி என்ற 2 மகள்களும், மேற்படி வெற்றிப்பாண்டியனுக்கு 2வது மனைவி கனிமொழி என்பவருக்கு வீரமாகாளி என்ற ஆண் குழந்தையும் உள்ளது என்றும், மேற்படி வெற்றிப்பாண்டியணின் 2வது மனைவி கனிமொழி என்பவருக்கு ஆண்குழந்தை வீரமாகாளி என்பவர் பிறந்து அவருடைய தாயார் வீட்டில் வசித்து வருகிறார் என்பது தெரியவருகிறதாகவும், மேற்படி

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.17 16:05:28 +0530

இறந்துபோன வெற்றிப்பாண்டியனின் முதல் மனைவி சரண்யா என்பவர் லாடனேந்தல் கிராமத்தில் தற்போது வசித்து வரவில்லை என்பது தெரியவருகிறதாகவும், மேற்படி வெற்றிப்பாண்டியனுக்கு 2 மனைவிகள் என்பதால் 2ம் பிரதிவாதியின் அலுவலகத்திலிருந்து நீதிமன்றம் மூலம் வாரிசு சான்றிதழ் பெற உத்தரவு பெற்றுக்கொள்ள வேண்டி வாதியின் மனுவும் 2ம் பிரதிவாதி அலுவலகத்தில் நிராகரிகப்பட்டன என்றும், சமூகம் நீதிமன்றம் வெற்றிப்பாண்டியனுக்கு வாரிசுப்படி கொடுக்க வேண்டி உத்தரவிட்டால் வாரிசு சான்றிதழ் கொடுக்க தயாராக உள்ளது என்பதும் இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறதாகவும், சரியான ஆவணங்களின் படி வாதிக்கு வாரிசு சான்றிதழ் கொடுக்க 2ம் பிரதிவாதி சம்மதம் தெரிவித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) 3ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை சுருக்கம்**

வாதியின் தாவா வழக்கு சுத்தப்பொய். வாதிக்கு யாதொரு பரிகாரங்களும் சட்டப்படி கிடைக்கக்கூடியதில்லை என்றும், பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர பிற ஏனைய சங்கதிகள் யாவும் பொய் என்றும் அவை யாவற்றையும் வாதியே கண்டிப்பாய் நிரூபிக்க வேண்டும் என்றும், உண்மையில், 3, 4 பிரதிவாதிகளின் மகனான வெற்றிப்பாண்டியன் என்பவருக்கு 5ம் பிரதிவாதியான சரண்யா என்பவர் மட்டுமே மனைவி என்றும், இறந்துபோன வெற்றிப்பாண்டியனுக்கு இந்த 3, 4 பிரதிவாதிகள் 5ம் பிரதிவாதியை மட்டுமே சட்டப்படியாக ஊரில் உள்ள யாவரும் அறிய திருமணம் செய்து வைத்து, மேற்படியார்களுக்கு 6, 7 பிரதிவாதிகள் பிறந்தனர் என்பது மட்டுமே உண்மை என்றும், இந்த மைனர் வாதியின் தாயார் கனிமொழி என்பவரை 3, 4 பிரதிவாதிகளின் மகன் வெற்றிப்பாண்டியன் என்பவர் திருமணம் செய்து கொண்டது கிடையாது என்றும், முதல் மனைவியான 5ம் பிரதிவாதி சரண்யா உயிருடன் இருக்கும் போது, கனிமொழி என்பவரை இரண்டாவது மனைவியாக திருமணம் செய்துகொண்டுள்ளார் என்று கூறியுள்ள சங்கதியும் சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், வெற்றிப்பாண்டியனுக்கும்,

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.17 16:05:43 +0530

கனிமொழிக்கும் பிறந்தவர் தான் இந்த மைனர் வீரமாகாளி என்பதை சட்டப்படியாக நிரூபிக்க வேண்டிய பொறுப்பு மேற்படியாரின் தாயாரும், கார்டியனுமான கனிமொழி என்பவரையே சேரும் என்றும், தாவா வழக்கில் இறந்துபோன வெற்றிப்பாண்டியனுக்கு இந்த வாதி சட்டப்படியான வாரிசு என விளம்புகை செய்யக் கோரி தாக்கல் செய்துள்ள தாவா வழக்கில் மேற்படி வெற்றிப்பாண்டியனின் தகப்பனாரான 3ம் பிரதிவாதியையும், 4ம் பிரதிவாதியான கல்பனாதேவியையும் தாவா வழக்கில் தரப்பினராகச் சேர்க்க வேண்டிய அவசியம் சட்டப்படியாக கிடையாது என்ற நிலையில், மேற்படியார்களை வயதான காலத்தில் வீண் அலைக்கழிவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தாவா வழக்கில் தரப்பினராகச் சேர்த்து வாதி தாக்கல் செய்துள்ள தாவா வழக்கும் Not of necessary Parties என்ற தோஷத்தால் தாவா வழக்கும் தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாக உள்ளது என்றும், ஆகவே வாதியின் பிராதினை 3ம் பிரதிவாதியின் வகை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**5) எழுவினாக்கள்:–**</u>

வாதிகளின் வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை மற்றும் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பரிசீலனை செய்து கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.

1. வாதி மற்றும் 3 முதல் 7 பிரதிவாதிகள் இறந்துபோன வெற்றிப்பாண்டியனின் வாரிசுகள் என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

2. தாவா வழக்கு தேவையற்ற தரப்பினரை (Mis Joinder of parties) சேர்த்துள்ள தோஷத்தால் பாதிப்படைந்துள்ளதா ?

3. தரப்பினர்களுக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரங்கள் என்ன?

4. இருபுறமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. வாதி தரப்பில் வாதியின் இயற்கை பாதுகாவலரும், தாயாருமான கனிமொழி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் யாரும்

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.17 16:05:49 +0530

விசாரிக்கப்படவில்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்ல.

**7)எழுவினா-1**

இவ்வழக்கில் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், லாடனேந்தல் குரூப், லாடனேந்தல் கிராமம், வீரலெட்சுமிபுரத்தில் கதவு எண்.2/221 மதுரை – ராமேஷ்வரம் நெடுஞ்சாலை என்ற முகவரியில் நிரந்தர வசிப்பாக வசித்து வந்து மதுரை-625009, அனுப்பானடி மதுரை – தூத்துக்குடி ரிங்ரோடு, வேலம்மாள் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் வைத்து கடந்த 28.07.2019ம் தேதி இறந்துபோன வெற்றிப்பாண்டியன் என்பவருக்கு இந்த வாதியான வீரமாகாளி உள்ளிட்ட 3 முதல் 7 வரை பிரதிவாதிகள் சட்டப்பூர்வமான வாரிசு என விளம்புகை செய்யக்கோரி இந்த நிர் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) இவ்வழக்கில் கண்ட வாதியான மைனர் வீரமாகாளி இறந்துபோன வெற்றிப்பாண்டியனுக்கும் அவரது 2வது மனைவியும் வாதியின் தாயாரும், இயற்கை பாதுகாவலருமான கனிமொழிக்கும் மகனாக பிறந்துள்ளார் என்பதை ஆவணங்களின் அடிப்படையில் அறிய முடிகிறது. இந்த நம்பர் வாதியின் தாயார் இந்த நம்பர் 2ம் பிரதிவாதியிடத்தில் இறந்துபோன வெற்றிபாண்டியனுக்கு தன்னையும், மைனர் வீரமாகாளி 3, 4 பிரதிவாதிகள் உள்ளிட்ட அனைவரையும் சேர்த்து வாரிசு சான்று கோரியதில் இறந்துபோன வெற்றிபாண்டியனுக்கு 2 மனைவிகள் என்பதால் வாதியின் தாயாரான கனிமொழி கொடுத்த இணையவழி மனுவானது 10.11.2022ம் தேதியில் நிராகரிக்கப்பட்டுள்ளது என்பதை வா.சா.ஆ.6 ஆவணத்தின் மூலம் அறிய முடிகிறது. இவ்வழக்கில் இறந்துபோன வெற்றிபாண்டியனின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் குறியீடு செய்யப்படவில்லை. மேற்படி வெற்றிப்பாண்டியனுக்கும் அவரது 2வது மனைவியான கனிமொழிக்கும் இந்த நம்பர் மைனர் வாதி கடந்த 16.06.2015ம் தேதியில் பிறந்துள்ளார் என்பதை காட்டக்கூடிய ஆவணமாக மேற்படி மைனர் வாதியின் பிறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள வம்சாவழி பட்டியல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வம்சாவழி பட்டியலில் இறந்துபோன

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.17 16:05:54 +0530

வெற்றிபாண்டியனின் உடன்பிறந்தவர்கள் என காட்டப்பட்டுள்ளனர். ஆனால் அவர்கள் வாரிசாக வரமாட்டார்கள் என்பதை வாதியே தனது பிராதில் ஒப்புக்கொண்டுள்ளார். 3, 4 பிரதிவாதிகள் மற்றும் இறந்துபோன வெற்றிபாண்டியன் சகோதர, சகோதரிகளுக்கு சொத்தில் பாகம் கோரி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.3 ஆகவும், மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை 3, 4 பிரதிவாதிகள் மற்றும் இறந்துபோன வெற்றிபாண்டியன் சகோதர, சகோதரிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.4 ஆகவும், அதற்கு 20.10.2015ம் தேதியிட்டு அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பின் அசல் வா.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்புமை செய்யப்பட்டு வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞரும், 3 முதல் 7 பிரதிவாதிகளான இறந்துபோன வெற்றிபாண்டியனின் தந்தை, தாய் மற்றும் இறந்துபோன வெற்றிபாண்டியனின் முதல் மனைவி அவரது மைனர் குழந்தைகள் சார்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்த போதிலும் எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

9) ஒரு இந்து ஆண் Interstate ஆக இறந்துவிட்டால் அவருக்கு யார் யாரெல்லாம் வாரிசாக வரமுடியும் என்பதை குறித்து இந்து வாரிசுஉரிமை சட்டம் 1956 பிரிவு 8-ல் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

Section 8- General rules of succession in the case of males- The property of male Hindu dying interstate shall devolve according to the provisions of this Chapter-

a) Firstly, upon the heirs, being the relatives specified in class I of the schedule

b) Secondly if there is no heir of class I then upon the heirs being the relatives specified in class II of the schedule

c) Thirdly, if there is no heir of any of the two classes then upon the agnates of the deceased and

d) Lastly, if there is no agnate, then upon the cognates of the deceased.

இங்கு முதல் நிலை வாரிசுதாரர்களை அறிய நாம் இந்து வாரிசு உரிமை சட்டத்தில் சொல்லியுள்ள பட்டியலை காண வேண்டியுள்ளது.

Class I

Son, daughter, widow, mother, Son of a pre-deceased son, daughter of a pre-deceased son; son

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.17 16:05:59 +0530

of a pre–deceased daughter; daughter of a pre–deceased daughter; widow of pre–deceased son; son of a pre–deceased son of a pre–deceased son; daughter of a pre–deceased son of a pre–deceased son, widow of a pre–decased son of a pre–deceased son [son of pre–deceased daughter of pre–deceased daughter; daughter of pre–deceased daughter of a pre–deceased daughter; daughter of pre–deceased son of pre–deceased daughter; daughter of pre–deceased daughter of pre–deceased son]

10) மேற்கண்ட பட்டியலை தாவா வழக்கு சங்கதிகளோடு ஒப்பிட்டு பரிசீலிக்கையில் இறந்துபோன வெற்றிபாண்டியனுக்கு அவரது தாயாரும், முதல் மனைவியும் முதல் மனைவி மூலம் பிறந்த 6, 7 மைனர் பிரதிவாதிகளும் 2வது மனைவி மூலம் பிறந்த இந்த நம்பர் மைனர் வாதியும் வாரிசாக வருவார்கள் என்பதை அறிய முடிகிறது. 2வது மனைவி வாரிசாகமாட்டார் என்பதை வாதி தரப்பில் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் இவ்வழக்கில் கண்ட 3ம் பிரதிவாதியான இறந்துபோன வெற்றிபாண்டியனின் தகப்பனார் இறந்துபோன வெற்றிபாண்டியனுக்கு இந்து வாரிசுரிமை சட்ட படி முதல்நிலை வாரிசாக வரமாட்டார் என்ற அடிப்படையில் வாதி கேட்டுள்ள விளம்புகை பரிகாரம் 3ம் பிரதிவாதியை பொறுத்து நிலைக்கக்கூடியதல்ல என்றும், 4 முதல் 7 பிரதிவாதிகள் மற்றும் மைனர் வாதியை பொறுத்து வாதியின் தாவா நிலைக்கக்கூடியது என்றும் முடிவு செய்து வாதி கேட்டுள்ள விளம்புகை பரிகாரம் அவருக்கு பகுதியாக கிடைக்கக்கூடியது என எழுவினா –1 பகுதியாக வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது.

<u>11) எழுவினா–2</u>

இவ்வழக்கில் 3ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 4 முதல் 7 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையில் தாவா வழக்கு தேவையற்ற தரப்பினரை சேர்த்துள்ளதால் (Mis–joinder of parties) எனும் தோஷத்தால் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இறந்துபோன வெற்றிபாண்டியனின் தகப்பனார் இந்து வாரிசுரிமை சட்டத்தின் படி முதல்நிலை வாரிசாக வரமாட்டார். அவரையும் தாவா வழக்கில் தரப்பினராக சேர்த்து வாரிசாக கோரியுள்ளதாலும், 3ம் பிரதிவாதியை பொறுத்து வாதி கேட்டுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியதல்ல என மேலே கண்ட எழுவினா–1ல்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.17 16:06:04 +0530

தீர்மானிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும் தாவா வழக்கு தேவையற்ற 3ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்த்துள்ளதால் Mis–joinder of parties எனும் தோஷத்தால் பாதிப்படைந்துள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்து எழுவினா–2 வாதிக்கு எதிராக தீர்மானிக்கப்படுகிறது.

12)எழுவினா–3

இவ்வழக்கு சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு தரப்பினர்களுக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13) **முடிவாக, வாதியின் தாவா பகுதியாக அனுமதிக்கப்பட்டு, சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், லாடனேந்தல் குரூப், லாடனேந்தல் கிராமம், வீரலெட்சுமிபுரத்தில் கதவு எண்.2/221 மதுரை–ராமேஸ்வரம் நெடுஞ்சாலை என்ற முகவரியில் நிரந்தர வசிப்பாக வசித்து வந்து மதுரை–625009, அனுப்பானடி, மதுரை–தூத்துக்குடி ரிங்ரோடு, வேலம்மாள் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் வைத்து கடந்த 28.07.2019ம் தேதி இறந்துபோன வெற்றிபாண்டியனுக்கு இந்த நம்பர் வாதி மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகள் சட்டப்பூர்வமான வாரிசு என விளம்புகை செய்தும், 3ம் பிரதிவாதியை பொறுத்து வாதியின் தாவா தள்ளுபடி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தர் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சசு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் வருடம் மார்ச் மாதம் 17–ம் நாள் செவ்வாய்கிழமை திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.17 16:06:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

| | |
|---|---|
| 1. வாதி தரப்பு சாட்சிகள்;: | |
| வா.சா.1 | கனிமொழி |

| 2. வாதி தரப்பு சான்றாவணங்கள்: | |
|---|---|
| வா.சா.ஆ.1 | மைனர் வீரமாகாளியின் பிறப்பு சான்று நகல் (அசலுடன் ஒப்புமை செய்யப்பட்டது) |
| வா.சா.ஆ.2 | வம்சாவழி பட்டியல் அசல் |
| வா.சா.ஆ.3 | கடந்த 08.10.2022ம் தேதியிட்ட வாதியால் 3, 4 பிரதிவாதிகள் உள்ளிட்ட வீரமுருகன், தனலெட்சுமி ஆகியோர்களுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சலக ரசீது |
| வா.சா.ஆ.4 | 3, 4 பிரதிவாதிகள் உள்பட வீரமுருகன், தனலெட்சுமி ஆகியோர் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை |
| வா.சா.ஆ.5 | கடந்த 20.10.2022ம் தேதியிட்ட வழக்கறிஞர் பதில் அறிவிப்பு அசல் |
| வா.சா.ஆ.6 | இந்த நம்பர் வாதியின் பாதுகாவலரும் தாயாருமான கனிமொழி இறந்துபோன வெற்றிப்பாண்டியனுக்கு வாரிசு சான்றிதழ் கேட்டு கொடுத்த மனுவிற்கு 2ம் பிரதிவாதியால் மேற்படி மனுவை நிராகரித்து வழங்கப்பட்ட குறிப்பாணை இணையதள பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.7 | வாதியின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்புமை செய்யப்பட்டது) |

3. பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் இல்லை

4. நீதிமன்ற சாட்சி மற்றும் சான்றாவணம் இல்லை

5. சாட்சி தரப்பு சான்றாவணம் இல்லை

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.17 16:06:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர், திருப்புவனம்

**அசல் வழக்கு எண்.47/2023**

**தீர்ப்புரை**

**நாள்:17.03.2026**

**தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.**

முடிவாக, வாதியின் தாவா பகுதியாக அனுமதிக்கப்பட்டு, சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், லாடனேந்தல் குரூப், லாடனேந்தல் கிராமம், வீரலெட்சுமிபுரத்தில் கதவு எண்.2/221 மதுரை–ராமேஸ்வரம் நெடுஞ்சாலை என்ற முகவரியில் நிரந்தர வசிப்பாக வசித்து வந்து மதுரை–625009, அனுப்பானடி, மதுரை–தூத்துக்குடி ரிங்ரோடு, வேலம்மாள் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் வைத்து கடந்த 28.07.2019ம் தேதி இறந்துபோன வெற்றிபாண்டியனுக்கு இந்த நம்பர் வாதி மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகள் சட்டப்பூர்வமான வாரிசு என விளம்புகை செய்தும், 3ம் பிரதிவாதியை பொறுத்து வாதியின் தாவா தள்ளுபடி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

VENKADESHPRASANTH

Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.17 16:06:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்